**கவனிக்க.-** *2019.07.26 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2135 - 2019 අගෝස්තු මස 02 වැනි සිකුරාදා - 2019.08.02

*2135 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1306 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) கம்பனிகள் (திருத்தம்) சட்ட மூலம் 2019, யூலை மாதம் 19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறை நிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 ஏ - தேசிய அபவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம்(கூட்டிணைத்தல்) (திருத்தம்) சட்ட மூலம் 2019, யூலை மாதம் 26 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின்பகுதி II இற்கு குறை நிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான
### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2019, ஒகத்து மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, ஒகத்து மாதம் 09 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1305- B81548 - 5,403 (2019/08)

# பரீட்சைகளும் பரீட்சை பெறுபேறுகளும் பிறவும்

**வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

**வடமேல் மாகாண அரசாங்க சேவையின் விவசாயத் திணைக்களத்தின் தொழில்நுட்ப உதவியாளர் (விவசாய செயற்றிட்ட) III ஆம் தர பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2019**

வடமேல் மாகாண அரசாங்க சேவையின் விவசாயத் திணைக்களத்தின் தொழில்நுட்ப உதவியாளர் (விவசாய செயற்றிட்ட) III ஆம் தர பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தகைமை பெற்ற வடமேல் மாகாணத்தினுள் நிரந்தர வதிவைக் கொண்ட இலங்கையரான ஆண், பெண் இருபாலாரிடம் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தப் பரீட்சை வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் 2019, செத்தெம்பர் மாதம் குருநாகல் நகரில் அமைக்கப்படும் பரீட்சை நிலையம் ஒன்றில் நடைபெறும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது. பரீட்சையைப் பிற் போடுவதற்கும், இரத்துச் செய்வதற்கும் வடமேல் மாகாண கௌரவ ஆளுநருக்கு அதிகாரம் உள்ளது.

1. **சம்பள அளவுத் திட்டம்:**
இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் MN 1 - 2016 இன் அடிப்படையில் ரூ. 29,840.00-10x300-11x350-10x560-10x660- ரூ. 48,890.00 ஆகும்.
( 2020.01.01 ஆந் திகதி வரை மேற் கூறப்பட்ட சுற்று நிருபத்தின் உப பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளம் வழங்கப்படும்.)

2. **தகைமைகள்:**

2.1. கல்வித் தகைமைகள் :
மொழி கணிதம் மற்றும் விஞ்ஞானம் உள்ளடங்களாக இரு அமர்வுகளுக்கு மேற்படாது ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

2.2. தொழில் தகைமைகள் :

(i) அரசின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படும் இரண்டு வருட விவசாய டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(ii) அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 01/2012 இன் அடிப்படையில் குறித்த துறையில் தேசிய தொழிற்றகைமையில் 05 ஆம் மட்ட பாடநெறி சான்றிதழ் ஒன்றைப் ( NVQ 5 ) பெற்றிருத்தல்.

அல்லது

(iii) மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் மேற்கூறிய தகைமை அல்லது சமனானதாக ஏற்றுக் கொள்ளக் கூடிய தகைமை ஒன்றைப் பெற்றிருத்தல் மற்றும் இலங்கைத் தொழில்நுட்ப சேவை நியதிச் சபை ஏற்றுக் கொள்ளும் மேலே கூறப்பட்ட தகைமைகளுக்கு சமனான அல்லது உயர்வான தகைமை ஒன்றைப் பெற்றிருத்தல்.

2.3. உடற் தகைமைகள் :
எல்லா விண்ணப்பதாரிகளும் வடமேல் மாகாணத்தின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய பணிகளை மேற்கொள்வதற்கும் போதுமான உடல், உள தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

2.4. ஏனையவை:

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வடமேல் மாகாண அதிகாரப் பிரதேசத்தினுள் ஆகக் குறைந்தது 03 வருடங்களுக்கு குறையாத காலத்திற்கு நிலையான வதிவைக் கொண்டவராக இருக்க வேண்டும். (தேர்தல் இடாப்பு அல்லது பிரதேச செயலாளரினால் விநியோகிக்கப்படும் சான்றிதழ் ஒன்றின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

(ii) சிறந்த நடத்தையுடையவராக காணப்பட வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியான 31.08.2019 ஆந் திகதிக்கு முன்னர் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

(iv) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாதவராகவும், 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

3. **சேவை நிபந்தனைகள் :**

3.1. இப்பதவி நிரந்தரமானது. சேவைக்கு உரித்தான ஓய்வூதியம் முறை தொடர்பில் அரசு எதிர்காலத்தில் மேற்கொள்ளும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும்.

3.2. இப்பதவிக்கு நியமனம் செய்யப்படுவது மூன்று (03) வருட நன்னடத்தைக் காலத்திற்கு உட்படுத்தப்பட்டதாகும் என்பதுடன், அவரின் நன்னடத்தைக் காலத்தினுள் தனது பணிகள் மற்றும் நடத்தை திருப்திகரமான மட்டத்தில் பேணிச் சென்று, முதலாவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்தும் இருப்பின் ஏனைய சேவையில் நிரந்தரமாக்கப்படுவதற்கு அவசியமான எல்லா தேவைகளும் பூரணப்படுத்தப்பட்டிருப்பின் நன்னடத்தைக் கால முடிவில் அவரது சேவை நிரந்தரமாக்கப்படும்.

3.3. அரச நிர்வாக சுற்று நிருபம் 01/2014 இன் படியும் அதன் தொடர்ச்சியான சுற்று நிருபங்களின் படியும் பணியிலமர்ந்து 05 வருடங்களுக்குள் பணியில் இணைந்த மொழிக்கு மேலதிகமாக மற்றைய தேசிய மொழியில்/மொழிகளில் தேர்ச்சி பெறல் வேண்டும்.

3.4. இந்தப் பதவிக்குரிய நியமனம் செய்தல்/ பதவி உயர்வு செயற் கோவையின் விதிமுறைகளுக்கு மேலதிகமாக இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதி சார் விதிமுறைகளுக்கும் வடமேல் மாகாண நிதி ஒழுங்குக் கோவையின், வடமேல் மாகாண ஒழுக்காற்றுக் கோவை, வடமேல் மாகாண சபை ஒழுங்கு விதிமுறைகள், திணைக்கள கட்டளைகள், வடமேல் மாகாண தொழில்நுட்ப சேவை யாப்புக்கும், அரசு மற்றும் வடமேல் மாகாண சபை மூலம் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் ஏனைய விதிமுறைகளுக்கும், கட்டளைகளுக்கும் இயைபாக பணியாற்ற சகல உத்தியோகத்தர்களும் கடப்பாடுடையவர்களாக இருக்கின்றார்கள்.

4. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை :**

வடமேல் மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக் குழு மூலம் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். பரீட்சை பாடத்திட்டத்தில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 40% க்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் பரீட்சார்த்திகளைத் தெரிவு செய்து, அவர்கள் அந்த புள்ளிகளின் கூட்டுத் தொகையின் அடிப்படையில் முன்னுரிமைப் பட்டியல் வரிசைப் படி வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமனான எண்ணிக்கையினர் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். நேர்முகப் பரீட்சைக்காக புள்ளிகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது என்பதுடன் தகைமைகள் பரிசீலிக்கப்படல் மாத்திரம் நடைபெறும்.

5. **எழுத்துப் பரீட்சை :**

5.1. எழுத்துப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படுவதுடன், விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

5.2. இப் பரீட்சை இரு வினாப்பத்திரங்களை உள்ளடக்கியது.

| வினாப் பத்திரம் | காலம் | மொத்தப் புள்ளி | சித்திப் புள்ளி |
|---|---|---|---|
| 1. பொது உளச் சார்பு | 01 மணித்தியாலம் | 100 | 40% (குறைந்தது) |
| 2. அகநிலை தொழில்நுட்பப் பரீட்சை | 01 1/2 மணித்தியாலம் | 100 | 40% (குறைந்தது) |

விரிவான பாடத்திட்டம் அட்டவணை 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

6. **பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக் கட்டணமாக ரூ. 600.00 ஐ வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைக்கப்படுமாறு செலுத்த வேண்டும். வடமேல் மாகாணத்தில் வசிக்கும் விண்ணப்பதாரி தனது நிரந்தர வதிவைக் கொண்ட பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் காரியாலயத்தில் அந்த நிதியைச் செலுத்த வேண்டும். அவ்வாறு பணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட வ.மே.மா.ச.நி 2 பற்றுச் சீட்டினை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் இணைத்து அனுப்ப வேண்டும். அவ்வாறு பணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச் சீட்டு தவிர, வேறு நிறுவனங்களில் செலுத்தி பெற்றுக் கொள்ளும் பற்றுச் சீட்டுகள் அல்லது காசுக் கட்டளைகள் பொறுப்பேற்கப்பட மாட்டாது. (பற்றுச் சீட்டின் நிழற் படப்பிரதி ஒன்றை தம்வசம் வைத்திருத்தல் எதிர் காலத்தில் பயன்படலாம்.) எக்காரணம் கொண்டும் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதையும் இந்தப் பரீசைக் கட்டணத்தை வேறு பரீட்சை ஒன்றுக்கு மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

7. **விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

7.1. இந்த அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கு இசைவாக A4 தாளில் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 30.08.2019 ஆந் திகதி அல்லது

அதற்கு முன்னர் " செயலாளர், வடமேல் மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக் குழு, மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருநாகல்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தை உள்ளடக்கி அனுப்பும் கடிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் " வடமேல் மாகாண அரசாங்க சேவையின் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உதவியாளர் (விவசாய செயற்றிட்டம்) III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2019 " எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

7.2. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**
இந்த உறுதிப்படுத்தல் அரசாங்க பாடசாலை ஒன்றின் அதிபர் /சமாதான நீதவான் /சத்தியப் பிரமாண ஆணையாளர் / சட்டத்தரணி / இராணுவத்தின் அல்லது விமானப் படையின் அதிகாரி அல்லது ரூபா 32,960.00 அல்லது அதற்கு மேற்பட்ட அல்லது அரசின் உயர்ந்த மாதாந்த அடிப்படைச் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளும் நிரந்தரமான அரசாங்க /மாகாண அரசாங்க சேவையின் நிறைவேற்று உத்தியோத்தர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

7.3. விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 30.08.2019 ஆகும்.

7.4. மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவில்லாத, குறித்த தினத்திற்கு முன்னர் பணம் செலுத்தத் தவறிய, தாமதமாக கிடைக்கின்ற, தெளிவற்ற, பூரணமற்ற மற்றும் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் முன் அறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததா என்பதை உறுதி செய்து கொள்ளுதல் விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். முறையாக விண்ணப்பத்தை பூர்த்தி செய்யாமையால் ஏற்படும் நட்டங்களுக்கு விண்ணப்பதாரியே பொறுப்பாளர் ஆவார். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் நிழற் பிரதி ஒன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கலாம். விண்ணப்பம் கிடைக்கப் பெற்றமை அறிவிக்கப்பட மாட்டாது.

8. போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான அனுமதிச் சீட்டு அனுப்பப்படுதல் என்பது விண்ணப்பதாரி இந்தப் பதவிக்கான தகைமையைப் பெற்றுள்ளார் என்பதை ஏற்றுக் கொண்டமை ஆகாது. தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக உரிய ஆவணங்களின் மூலப் பிரதிகள் நேர்முகப் பரீட்சையின் போது முன்வைக்கப்படல் வேண்டும்.

9. **பரீட்சார்த்திகளின் அடையாளத்தை உறுதி செய்தல் :**
பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் ஆளடையாளத்தை உறுதி செய்ய பின்வரும் ஆவணங்களின் மூலம் உறுதி செய்ய வேண்டும்.
(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை
(ஆ) செல்லுபடியான கடவுச் சீட்டு

குறிப்பு : பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த விண்ணப்பதாரி தவறினால் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியற்றவராகக் கருதப்படுவார்.

10. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் பரீட்சைக் கட்டணத்தை உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் செலுத்தி விண்ணப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் வடமேல் மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளரால் பரீட்சைக் கால அட்டவணையுடன் அனுமதி அட்டை வழங்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பட்ட உடனேயே வடமேல் மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் அலுவலக இணையத் தளத்தில் (www.psc.nw.gov.lk) அறிவித்தல் விடுக்கப்படும். பரீட்சை அறிவித்தல் வெளியிடப்பட்டு 03 நாட்கள் கழிந்த பின்னரும் பரீட்சை அனுமதிச் சீட்டு கிடைக்கப்பெறாதவர்கள் அது தொடர்பில் உடனடியாக வடமேல் மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரிற்கு பின்வரும் விபரங்களுடன் அறிவிக்க வேண்டும். பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரிகளினால் பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்கு அவர்களின் கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப் பத்திரத்தினை ஒப்படைக்க வேண்டும்.

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் ;
(iii) தேசிய ஆளடையாள அட்டை இல. ;
(iv) முகவரி ;
(v) விண்ணப்பத்தை தபாலிலிட்ட திகதி மற்றும் பதிவு பற்றிய தகவல்கள் .

11. ஏதேனும் ஒரு விண்ணப்பதாரி தகுதியற்றவர் என நியமனம் வழங்குவதற்கு முன்னர் அறியப்பட்டால் எந்தச் சந்தர்ப்பத்திலும் அவர் தகைமையிழந்தவராக கருதப்படுவார். நியமனம் வழங்கப்பட்ட பின்னர் வேண்டுமென்றே போலியான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது என்பது அல்லது சரியான தகவல்கள் வேண்டுமென்றே மறைக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

12. இந்தப் பரீட்சையை நடாத்துதல், நடாத்தாது விடுதல் அல்லது நடாத்திய பின்னர் தெரிவு செய்தல் /தெரிவு செய்யாமல் விடல் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுத்தல் வடமேல் மாகாண ஆளுநருக்கு உரியதாகும். இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை வடமேல் மாகாண சபைக்கேயுரியது.

13. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் வெளியிடப்படும் அறிவித்தல்களில் சொற்றொடர்களிடையே இணக்கமின்மைகள் அல்லது பொருத்தமின்மைகள் காணப்படுமாயின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தல் சரியானதாகக் கருதப்படும்.

ஆர். எம். ஆர். எம். ரத்னாயக்க,
செயலாளர்,
வடமேல் மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.

மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருநாகல்.
2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆம் திகதி.

**அட்டவணை 01**

**விரிவான பாடத்திட்டம்**

01. **பொது உளச்சார்பு**
விண்ணப்பதாரியின் சிந்திக்கும் தர்க்கத்திறன், சிந்திக்கும் பகுப்பாய்வு நிலை, தீர்மானமெடுக்கும் ஆற்றல் என்பவற்றை பரீட்சித்துப் பார்க்கும் வினாக்களை உள்ளடக்கியது.

02. **அகநிலை தொழில்நுட்பப் பரீட்சை :**

1. இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் விவசாயத்தின் பங்களிப்பு.
   (அ) மொத்த தேசிய உற்பத்திக்கு விவசாயத் துறையின் பங்களிப்பு.
   (ஆ) தொழிலின்மை.
   (உ) விவசாயத் துறையில் ஏற்றுமதி, இறக்குமதி நிலைமை.

2. இலங்கையின் காலநிலை வலயங்கள் தொடர்பான அறிவு.

3. மண் மற்றும் தாவரப் போசணை
   (அ) மண்ணின் தன்மை, பௌதீக மற்றும் இரசாயன உவர்த் தன்மை பயிர் வளர்ப்பில் ஏற்படுத்தும் தாக்கம்.
   (ஆ) தாவரப் போசணை, மண்/போசணை முகாமைத்துவம்.
   (இ) நாற்று போசணை தொடர்பான விசே விடயங்கள்.

4. நெல் உற்பத்தி
   (அ) மண் காலநிலை தேவைப்பாடுகள்.
   (ஆ) வகைகள்.
   (இ) நிலத் தயார்படுத்தல் மற்றும் நாற்று மேடை பராமரிப்பு.
   (ஈ) களைகள் மற்றும் நோய்த் தடுப்பு.
   (உ) பசளையிடல்.
   (ஊ) நீர் முகாமைத்துவம்/விளைச்சலை அதிகரித்துக் கொள்ளும் நூ தன முறைகள்.
   (எ) அறுவடை செய்தல் மற்றும் பின் அறுவடைத் தொழில்நுட்பம்.

5. வேறு களப் பயிர் உற்பத்திகள்
   (அ) பெரிய வெங்காயம், மிளகாய், உருளைக் கிழங்கு, சோளம் மற்றும் ஏனைய பயிர் வகைகள்.

6. மரக்கறி உற்பத்தி
   (அ) மரக்கறி நாற்று மேடைப் பராமரிப்பு.
   (ஆ) விவசாயத் திணைக்களம் விசேட கவனம் செலுத்தியுள்ள மரக்கறி வகைகள் தொடர்பான பிரச்சாரம் மற்றும் நடுகை நடவடிக்கைகள், அறுவடை செய்தல், தயார்படுத்தல்.

7. பழ வகை
   (அ) விவசாயத் திணைக்களம் விசேட கவனம் செலுத்தியுள்ள பழ வகைகள் தொடர்பான பிரச்சாரம் மற்றும் நடுகை நடவடிக்கைகள்
   (ஆ) அறுவடை செய்தல், தயார்படுத்தல்.

8. பயிர்ப் பாதுகாப்பு
   (அ) பயிர்களுக்கு ஏற்படும் பிரதான நோய்கள் மற்றும் களைகள் பூச்சிகளை இனங்காணல், அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகள்.
   (ஆ) களைத் தடுப்பு மற்றும் களைத் தடுப்பு முறைகள்.
   (இ) பூச்சி தடுப்பு முறையின் போது பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு முறைகள்.

9. நீர்ப்பாசனம் மற்றும் அதன் முக்கியத்துவம்

10. மண் பாதுகாப்பு
   (அ) மண் பாதுகாப்பின் முக்கியத்துவம் மற்றும் பல்வேறு மண் பாதுகாப்பு முறைகள்.

11. நீர்ப்பாசனம் மற்றும் நீர்வள முகாமைத்துவம்
   (அ) பல்வேறு வகைப் பயிர்களுக்கு பொருத்தமான நீர்ப்பாசன முறைகள் மற்றும் அவற்றின் நீர் முகாமைத்துவம்.
   (ஆ) நுண் நீர்ப்பாசன முறைகள்.

12. பண்ணை இயந்திரமயமாக்கல்
   (அ) பண்ணை இயந்திரமயமாக்கலின் நன்மை தீமைகள்.
   (ஆ) நிலத் தயார்படுத்தலுக்காக விவசாய உபகரணங்கள்.
   (இ) நீர்ப்பாசனம் மற்றும் கன்று பாதுகாப்புக்காக பயன்படுத்தப்படும் விவசாய உபகரணங்கள்.
   (ஈ) மேற்கூறிய உபகரணங்களின் செயற்பாடு மற்றும் பராமரிப்பு.

13. தேனீ வளர்ப்பு
   (அ) பொருளாதார முக்கியத்துவம்.
   (ஆ) தேனீ பெட்டிகள் ஆரம்பித்தல் மற்றும் நடாத்திச் செல்லுதல்.
   (இ) அறுவடை செய்தல் மற்றும் சந்தைக்குத் தயார் செய்தல்.

14. பூ வளர்ப்பு மற்றும் நில அலங்கரிப்பு
   (அ) பொருளாதார முக்கியத்துவம்.
   (ஆ) நில அலங்கரிப்பு முறைகள்.
   (இ) சந்தைக்காக வெட்டப்பட்ட பூக்களை உற்பத்தி செய்தல் மற்றும் சந்தைக்குத் தயார் செய்தல்.

15. பாதுகாப்பு பயிர் வளர்ப்பு
   (அ) முக்கியத்துவம்.
   (ஆ) திட்டமிடல்.
   (இ) பயிர்களைத் தெரிவு செய்தல் மற்றும் பராமரித்தல் மற்றும் அறுவடையைத் தயார் செய்தல்.

16. விலங்கு வளர்ப்பு
   (அ) கோழி வளர்ப்பு மற்றும் பசுக்கள் வளர்த்தல்.
   (ஆ) ஒருங்கிணைந்த பண்ணை கட்டுப்பாட்டின் கீழ் மேற்கூறிய விலங்கு உற்பத்திகளை மேற்கொள்ளுதல்.

17. விவசாய செயற்றிட்டங்கள்
   (அ) விவசாய செயற்றிட்ட உபாய மார்க்கங்கள் மற்றும் முறைகள்.
   (ஆ) விவசாய செயற்றிட்ட தொடர்பாடல் முறைகள்.

18. இழைய வளர்ப்பு
   (அ) இழைய வளர்ப்பின் அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் கடந்த கால தகவல்கள் பற்றிய அறிவு.
   (ஆ) இழைய வளர்ப்பின் பயன்பாடுகள் /பிரயோகங்கள், உதாரணங்கள்.
   (இ) இழைய வளர்ப்பின் அனுகூலங்கள் /பிரதிகூலங்கள்.

19. கன்றுகள் தொற்றுத் தடுப்பு ( Quarantine ) தொடர்பான அறிவு
   (அ) கன்றுகள் தொற்றுத் தடுப்பு தொடர்பான விதிமுறைகள்.
   (ஆ) கன்றுகள் தொற்றுத் தடுப்பு முறைகள்.

20. தாவரப் பாதுகாப்பு
   (அ) தாவரப் பாதுகாப்பின் முக்கியத்துவம் ( தாவரங்கள் /மரபணு ப்ளஸ்மா ).
   (ஆ) தாவரப் பாதுகாப்பு முறைகள் ( தாவரங்கள் /மரபணு ப்ளஸ்மா ).

21. மரபணுத் தொழில் நுட்பம்
   (அ) DNA வின் முக்கியத்துவம்.
   (ஆ) மரபணு என்றால் என்ன? அதன் தொழிற்பாடு.
   (இ) மரபணு பொறியியல் நுட்ப முறைகள் மூலம் தாவரங்களை மேம்படுத்த முடியுமான சந்தர்ப்பங்கள்.

22. விவசாய அபிவிருத்தி
   நிகழ்கால விவசாய அபிவிருத்தி கொள்கைகள், அவற்றின் முக்கியத்துவம், விவசாய அபிவிருத்தி தொடர்பாக மத்திய அரசின் கீழ் உள்ள திணைக்களங்கள் மற்றும் வேறு நிறுவனங்கள், மத்திய அரசின் விவசாயத் திணைக்களத்தின் கீழ் உள்ள நிறுவனங்கள், பிரிவுகள் மற்றும் அவற்றின் பணிகள், விவசாயத் துறையின் நிகழ்கால பிரச்சினைகள் மற்றும் சவால்கள், விவசாய அபிவிருத்தி நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும் விதம், விவசாய அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் சாதகமான, பாதகமான தாக்கங்கள்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**வடமேல் மாகாண அரசாங்க சேவையின் விவசாயத் திணைக்களத்தின் தொழில்நுட்ப உதவியாளர் (விவசாய செயற்றிட்ட) III ஆம் தர பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2019**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் (உரிய கூட்டினுள் ✓ அடையாளம் இடுக.)

சிங்களம் : ☐ தமிழ் : ☐ ஆங்கிலம் : ☐

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களம் / தமிழில் ) திரு./ திருமதி/ செல்வி : ..........................................
..........................................................................................................................
   1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில் ) Mr./ Ms./ Mrs. : ....................................
..........................................................................................................................
   1.3 முழுப் பெயர் (சிங்களம்/ தமிழ் ) : திரு./ திருமதி/ செல்வி :.................................................
..........................................................................................................................
   1.4 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்): Mr./ Ms/ Mrs. : ...................................................
..........................................................................................................................
   1.5 தேசிய ஆளடையாள அட்டை இல. :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

2. 2.1 நிரந்தர முகவரி (சிங்களம்/தமிழில் ):.......................................................................................
   2.2 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்தில் ) : ..........................................................................
   2.3 அனுமதிப் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி : ............................................................................
   2.4 தொலைபேசி இல.: ...........................................................................

3. 3.1 பால் : பெண் (F) ☐ ஆண் (M) ☐

3.2 பிறந்த திகதி : ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.3 2019.08.30 ஆந் திகதிக்கு வயது : வருடங்கள் : ☐☐☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

4. 4.1 விண்ணப்பதாரி வதியும் நிர்வாக மாவட்டம் : ……………………………………………………………………………

4.2 பிரதேச செயலாளர் பிரிவு: ……………………………………………………………………………………………

4.3 கிராம அலுவலர் பிரிவு : …………………………………………………………………………………………

5. கல்வி மற்றும் தொழில் தகைமைகள் :

5.1 க.பொ.த. (சா.த.) பரீட்சை தொடர்பான விபரங்கள் :

பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டு, மாதம் (முதல் முறை) : ……………………………………………………………

பரீட்சைச் சுட்டெண் : ……………………………………………………………

| | பாடம் | பெறுபேறு | | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | |
| 2 | | | 7 | | |
| 3 | | | 8 | | |
| 4 | | | 9 | | |
| 5 | | | 10 | | |

5.2 க.பொ.த. (சா.த.) பரீட்சை தொடர்பான விபரங்கள் :

பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டு, மாதம் (இரண்டாம் முறை) : ……………………………………………………………

பரீட்சைச் சுட்டெண் : ……………………………………………………………

| | பாடம் | பெறுபேறு | | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | |
| 2 | | | 7 | | |
| 3 | | | 8 | | |
| 4 | | | 9 | | |
| 5 | | | 10 | | |

5.3 தொழில் தகைமைகள் :

| நிறுவனம் | கற்றுள்ள பாடநெறி | காலப்பகுதி | பெறுபேறு | சான்றிதழின் இலக்கம் மற்றும் திகதி |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

06. பரீட்சைக் கட்டணம் செலுத்தியமை தொடர்பான விபரங்கள் :

6.1 பற்றுச் சீட்டு இலக்கம் : ............................................. தொகை : ............................
திகதி : ............................................................... வழங்கிய பிரதேச செயலகம் : ............................

| பற்றுச் சீட்டை கழறாதவாறு இந்த கட்டத்தினுள் ஒட்டவும் |
|---|

07. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) இந்த விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானதும் சரியானதும் எனவும், இங்கு ஒரு பகுதி பூரணப்படுத்தப்படாமை மற்றும் பிழையாக பூரணப்படுத்துவதால் ஏற்படக் கூடிய நட்டங்களை ஏற்றுக் கொள்வதற்கு உடன்படுகிறேன்.

(ஆ) என்னால் வழங்கப்படும் உறுதியுரை பொய்யானது என உறுதிப்படுத்தப்பட்டால் பதவிக்கு நியமனம் பெறுவதற்கு முன்னர் தகுதியற்றவராவேன் என்பதையும், பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னால் பதவியில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

திகதி :- ............................. ........................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

08. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./திருமதி/செல்வி ............................................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும், அவர் மூலம் ........................ ஆந் திகதி என் முன்னிலையில் ஒப்பமிட்டார் என்பதையும் உறுதி செய்கின்றேன்.

கையொப்பம் :...................................................................
உறுதிப்படுத்துபவரின் பெயர் : ...................................................................
பதவி, உத்தியோகபூர்வ முத்திரை :...................................................................
திகதி : :...................................................................

(விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரி, பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் ஓர் உத்தியோகத்தர், அல்லது ரூபா 32,960.00 இற்கு மேற்பட்ட மாதாந்த அடிப்படைச் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளும் நிரந்தரமான அரசாங்க சேவையின் நிறைவேற்று உத்தியோகத்தர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

08-486

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி கிடைக்கப் பெறாமை முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகர் என்ற முகவரிக்கு அறிவியுங்கள்**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III ஆவது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I ஆவது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III ஆவது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V ஆவது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI ஆவது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 40.00 | 60.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III ஆவது தொகுதி | 15.00 | 60.00 |
| I ஆவது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| III ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V ஆவது பகுதி | 123.00 | 60.00 |
| VI ஆவது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2019**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஓகத்து** | .. | வெள்ளி | 02.08.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.07.2019 |
| | | வெள்ளி | 09.08.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.07.2019 |
| | | வெள்ளி | 16.08.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.08.2019 |
| | | வெள்ளி | 23.08.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.08.2019 |
| | | வெள்ளி | 30.08.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.08.2019 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 06.09.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.08.2019 |
| | | வியாழன் | 12.09.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.08.2019 |
| | | வெள்ளி | 20.09.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.09.2019 |
| | | வெள்ளி | 27.09.2019 | .. | நண்பகல் 12 | வியாழன் | 12.09.2019 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 04.10.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.09.2019 |
| | | வெள்ளி | 11.10.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.09.2019 |
| | | வெள்ளி | 18.10.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.10.2019 |
| | | வெள்ளி | 25.10.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.10.2019 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2019 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதி.